செ.வெ.எண்:32 நாள்: 21.07.2020

# பத்திரிக்கைச் செய்தி

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) 2020-21ஆம் ஆண்டில் தரிசு நிலங்களை சாகுபடிக்கு தகுந்த விளைநிலங்களாக மாற்றும் சிறப்புத் தொகுப்புத் திட்டம் கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தங்களுடைய தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றலாம்.

கரூர் மாவட்டத்திற்கு 110 ஹெக்டேர் சிறுதானியங்கள், 150 ஹெக்டேர் பயறுவகைகள் மற்றும் 75 ஹெக்டேர் எள் பயிர்களுக்கு இலக்கு பெறப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேர் பரப்பிற்கு அதிகபட்சமாக சிறுதானியங்கள் மற்றும் எள் பயிரிட ரூ.10,000/- பின்னேற்பு மானியம் மற்றும் பயறு வகைப்பயிரிகள் பயிரிட ரூ.9250/- மானியமாக வழங்கப்படுகிறது.

விவசாயிகள் 5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக உள்ள நிலங்களை சாகுபடிக்குகொண்டு வருவதற்கு தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நில உரிமை ஆவணம், நிலம் தரிசாக உள்ளது என கிராம நிர்வாக அலுவலர் சான்று, வங்கி கணக்கு புத்தகம் ஒளிநகல் ஆகியவையுடன் அணுக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் விதைகள், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உரம் மானியத்தில் வழங்கப்படும். மேலும், பின்னேற்பு மானியமாக முள்வேலிகள் / புதர்செடிகள் அகற்றல், நிலம் சமன்படுத்துதல், உழவு பணி மேற்கொள்ளுதல் விதைப்பு இயந்திரம் கொண்டு விதைத்தல் போன்ற பணிகளுக்கு மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரிடையாக வைக்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தினை தொடர்பு கொண்டு பயனடைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.